உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த முன்னாள் ஆளுநர் திரு உஜ்ஜல் சிங் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கின்ற வகையில் பேரவை நிகழ்ச்சிகள் இப்போது ஒத்திவைக்கப்படு கின்றன. பேரவை மீண்டும் 10-30 மணிக்கு கூடும்.

பின்னர் பேரவை காலை 10-04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மீண்டும் பேரவை 10—30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ. பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மிகவும் பேரவதிக்கு உட்பட்டிருக்கிறார் கள். ஹாஸ்டலில் தண்ணீர் வரவில்லை, போன் சரியாக வேலை செய்யவில்லை. எனவே நீங்கள் இதை சிறப்புக் கவனத்தின் மூலமாக—தண்ணீர் இல்லாமல் சில உறுப்பினர்கள் குளிக்காமல் கூட வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊர் பூராவும் இதே பிரச்னைதான்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: ஏற்பாடு பண்ணியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொன்றையும் நான் இப்போதே சொல்லிவிடுகிறேன். இனிமேல் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு உறுப்பினருக்குத்தான் தண்ணீர். அப்படி வைத்துக்கொண்டால் பரவாயில்லை. ஒரு அறையில் பத்து பேர்கள் குளிப்பது என்றால் இப்போதே கிணற்றில் தண்ணீர் இல்லை என்ற நிலை இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் தங்கள் நண்பர்கள் சென்னைக்கு வருவதை சிறிது நாட்கள் தள்ளிவைக்கச் சொல்லிவிட்டு உறுப்பினர்கள் மட்டும் அறையில் வந்து தங்கினால் நன்றாயிருக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : என் ஞாபகம் சரியாக இருக்குமானால்—ஏழு லாரிகள் இவர்களுக்காக ஒதுக்கி தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாக ஞாபகம்.

திரு இரா. கருப்பையா ; இன்று காலை ஒரு லாரி கூட வரவில்லை.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1983-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 32 (1)ஐ தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-(1)ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.